# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

ஆணை நாள் 17.11.2020

**முன்னிலை**

**முனைவர் ரா.பிரதாப்குமார்**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 4394/B/18**

திரு ர. குருசாமி — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொது தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
விளாத்திகுளம் வட்டாட்சியர் அலுவலகம்.
தூத்துக்குடி மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (17.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு ர. குருசாமி மற்றும் பொது தகவல் அலுவலர், திரு ஆரோக்கியசாமி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், விளாத்திகுளம் வட்டாட்சியர் அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 18.01.2018 தேதியிட்ட மனுவில், விளாத்திகுளம் வட்டம், புதூர் கிராமம் சர்வே எண் 252/2 பட்டா எண் 2356ன் கூட்டு பட்டாவுக்கு தனி பட்டா கேட்டு 23.01.2016 அன்று மேற்படி பட்டாவிற்கு சம்பந்தமான அனைத்து நகல்களும் வைத்து, விளாத்திகுளம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட மனுவின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதன் விவரங்கள் தொடர்பாக விளாத்திகுளம் வட்டாட்சியர் அலுவலக பொது தகவல் அலுவலர் அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

3. தகவல்கள் வழங்கப்படாததால் மனுதாரர், 19.04.2018 தேதியிட்ட மனுவில் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். முழுமையான தகவல்களை பெற்றுத் தருமாறு தெரிவித்து, மனுதாரர் 19.06.2018 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டின் அடிப்படையில் தொலைபேசியின் வாயிலாக இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் தொலைபேசியின் வாயிலாக மனுதாரர் தான் கோரிய தகவல்கள் பொது தகவல் அலுவலரால் தனக்கு கிடைக்கப்பெற்றது என்றும், மேலும் நான் தனிப்பட்டா கோரிய சொத்தை எனது அண்ணன் மகனிடம் ஒப்படைத்து விட்டேன் என்றும், அதனால் எனது வழக்கின் மீது விசாரணை தேவையில்லை என்றும், மேற்படி எனது வழக்கிற்கு சம்பந்தப்பட்ட பொது தகவல் அலுவலரை தண்டிக்க வேண்டாம் என்றும் ஆணையத்தில் தெரிவித்தார். தொலைபேசியின் வாயிலாக, மேற்படி பொதுத் தகவல் அலுவலரை குறிப்பிட்ட

காலத்திற்குள் ஏன் தகவல் வழங்கவில்லை என்று ஆணையம் வினவியபோது, அதற்கு பொது தகவல் அலுவலர் தான் தற்சமயம் தான் பணியில் சேர்ந்ததாகவும், இனிவரும் காலங்களில் இதுபோன்று நிகழ்வுகள் நடைபெறாதவண்ணம் உடனுக்குடன் தகவல்கள் வழங்கிவிடுவதாகவும் தொலைபேசியில் தெரிவித்தார்.

5. மேற்படி மனுதாரர் தெரிவித்துள்ளதை ஆணையம் பதிவு செய்து, சட்டப்பிரிவு 7ன்படி விண்ணப்பத்தை பெற்ற 30 தினங்களுக்குள் மனுதாரர் கேட்டுள்ள தகவல்களை முழுமையாக பொது தகவல் அலுவலர் தரக் கடமைப்பட்டவராவார். மனுதாரரின் பிரிவு 6(1) மனுவை பெற்று கொண்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் தகவல் தராதது கண்டனத்துக்குரியது. இதனை ஆணையம் வன்மையாக கண்டிக்கிறது. இனிவரும் காலங்களில் மேற்கண்ட நிகழ்வுகள் நடக்காத வண்ணம் பார்த்து கொள்ள வேண்டும் என்று பொது தகவல் அலுவலருக்கு ஆணையம் அறிவுறுத்தி, இவ்வழக்கின் விசாரணை முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 4394/B/18</u>**

**<u>பெறுநர்</u>**

பொது தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
விளாத்திகுளம் வட்டாட்சியர் அலுவலகம்.
தூத்துக்குடி மாவட்டம்.

திரு ர. குருசாமி,
த/பெ திரு ரத்தினம்,
34/F1 நக்சத்திரா இல்லம்,
மாதா கோவில் தெரு,
பாரதி பார்க் அருகில்,
சேலையூர்,
சென்னை 73

Copy to: File
SCPA-19.11.20